2023 ஏப்ரல் 17]

கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 501 நபர்களுக்கு 11 கோடியே 87 இலட்சம் ரூபாய் மானியத்துடன் 37 கோடியே 3 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கியும், முதலீட்டு மானியத்தின்கீழ் 18 நிறுவனங்களுக்கு ரூபாய் 82 கோடியே 5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டும், இன்றைக்கு கடலூர் மாவட்டத்திலே பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆக, தொழில் தொடங்க யார் வந்தாலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை நம்முடைய அரசு செய்து தரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். Cess *வரியைப் பற்றிச் சொன்னார்கள். அது எங்களுடைய துறை இல்லை. அது வேளாண்மைத் துறை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

164—

கால்நடை மருத்துவமனை

***5335—திரு. அ.செ. வில்வநாதன்:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அகரம் ஊராட்சி, அகரம்சேரியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அகரம் ஊராட்சி, அகரம்சேரியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். எனது ஆம்பூர் தொகுதியில் உள்ள மாதனூர், வடசேரி, அகரம்சேரி ஆகிய கால்நடை மருந்தகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு திராவிட மாடல் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியினை தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆம்பூர் தொகுதியில், 11 கால்நடை மருந்தகங்கள் மற்றும் ஒரு கால்நடை கிளை நிலையம் உள்ளதால், சுமார் 50,000 கால்நடைகள் சிகிச்சை பெற்று வருகின்றன. அவை உயர் சிகிச்சை பெறுவதற்காக, கேட்டதை எல்லாம் கொடுக்கும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் எனது தொகுதியில் கால்நடை மருந்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வரையறைகளின்படி, நேரடியாக கால்நடை மருத்துவமனை துவங்க இயலாது. முதலில் அந்தப் பகுதியில் மூவாயிரம் கால்நடை அலகுகள் இருக்கும்பட்சத்தில், கால்நடை கிளை நிலையம் துவங்கப்படும். அந்தக் கிளை நிலையங்களில் தினமும் 30 கால்நடைகளுக்குக் குறையாமல் சிகிச்சை வழங்கும் நிலையில், அந்தப் பகுதியில் 5,000 கால்நடை அலகுகள் இருந்தால் அந்தக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அவ்வாறு தரமுயர்த்தப்படும் கால்நடை மருந்தகத்தில் தினமும் 40 கால்நடைகளுக்குக் குறையாமல் சிகிச்சை வழங்கும்பட்சத்தில், அந்த மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள ஆம்பூர்*

2023 ஏப்ரல் 17]

தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அகரம் ஊராட்சி, அகரம்சேரியில் 1,761 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. மேலும், அகரம்சேரியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குருவராஜபாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கே.வி. செட்டிக்குப்பத்தில் ஒரு கால்நடை மருந்தகமும் இயங்கி வருகின்றன.

முற்பகல் 10–30

எனவே, அரசின் வரையறைகளின்படி, அகரம்சேரியில் 3,000 கால்நடை அலகுகள் இல்லாததாலும், 3 கிலோ மீட்டர் தொலைவில் குருவராஜபாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருவதாலும் அகரம்சேரியில் கால்நடை கிளை நிலையம் புதிதாக அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் கோமாரி நோய், சினை ஊசி, கருவூட்டுதல் போன்ற நோய்களால் கால்நடைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் ஆங்காங்கே அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடை முகாம்கள் நடத்தி சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மேலும், அந்த நோய்கள் பரவி பாதிக்கப்படுவதைத் தவிர்க்க, கால்நடை மருந்தகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியில் கதவாலம் கால்நடை மருந்தகத்திற்குத் தேவையான 1 ஏக்கர் இடம் சர்வே எண் 129–ல் உள்ளது. இங்கு புதியதாக கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நாயக்கனேரி, வெங்கிலி ஊராட்சிகள் மலைக் கிராமப் பகுதிகளாகும். கால்நடைகளை சிகிச்சைக்குக் கொண்டு வர வேண்டுமென்றால், சுமார் 17 கி.மீ. தூரம் வரவேண்டியுள்ளது. அங்கு கால்நடை கிளை நிலையங்கள் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கரும்பூர், வடசேரி, மாதனூர், கீழ்முருங்கை, விண்ணமங்கலம், குருவராஜபாளையம், ஆசனாம்பட்டு ஆகிய கால்நடை மருந்தகங்களில் சுற்றுச்சுவர் இல்லாததால் தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்கவும், சமூக விரோதிகள், சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும், இந்தக் கால்நடை மருந்தகங்களுக்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையங்கள் இல்லாத பகுதிகளைக் கண்டறிந்து, தேவைப்படும் மருத்துவ மற்றும் இதர சேவைகளை கால்நடைகள் வளர்க்கப்படும் இடங்களில் வழங்கும் விதமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 245 கால்நடை மருத்துவ ஊர்திகளை வழங்கியுள்ளார்கள். அந்தவகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதிகளுக்கும் மருத்துவ சேவை அளிக்கின்ற வகையில் கால்நடை மருத்துவ ஊர்திகளின் சேவைகள் பயன்படுத்தப்படும்.

அதுபோல, கால்நடை மருந்தகங்களுக்கு சுற்றுச்சுவர் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயே சுற்றுச்சுவரைக் கட்டிக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், கண்ணனூர்பாளையம், கிளியனூர்பட்டி, மீனாட்சிபட்டி, வேலாயுதம்பாளையம், கோதூர்பட்டி, அய்யம்பாளையம்,

2023 ஏப்ரல் 17]

பொன்னுசங்கம்பட்டி, மேலகொத்தம்பட்டி, தேவரப்பம்பட்டி, கள்ளிக்குடி ஆகிய கிராமங்களில் பசுக்கள் 2,553-ம், எருமைகள் 249-ம், செம்மறி ஆடுகள் 3,662-ம், வெள்ளாடுகள் 4,313-ம், கோழிகள் 4,849-ம் ஆக மொத்தம் 15,626 இனங்கள் இருப்பதால், என்னுடைய தொகுதியான துறையூரிலிருந்து முசிறி தொகுதியிலுள்ள தா. பேட்டைக்கு 13 கி.மீ. தூரம் சென்றுதான் சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால், இந்தக் கிராமங்களுக்கு மையப் பகுதியாக இருக்கக்கூடிய கிளியனூர்பட்டி பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருவதற்காக ஏற்கெனவே கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை கிளை நிலையத்தை கிளியனூர்பட்டியில் அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு ஊர்களை குறிப்பிட்டு, அந்தப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கைகளையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லி, அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், எங்களுடைய துறையின்மூலம் ஆய்வு செய்து, அதுபோன்ற நிகழ்வு இருக்குமானால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்றாற்போல், அந்த ஊர்களில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள கால்நடை மருந்தகம், பன்முக கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கால்நடை மருந்தகம் எங்களுடைய வரன்முறைக்குட்பட்டிருக்குமானால் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கான நடவடிக்கைகள் நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

165—

ஆன்மிக சுற்றுலாத் தலம்

***11676—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதி, மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆன்மிக சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள முருகனின்